# கிருஷ்ணா அஷ்டகம்

வஸுதேவ ஸுதம் தேவம் கம்ஸ சாணூர மர்த்தனம் ।

தேவகீ பரமானந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத் குரும் ॥ 1 ॥

வசுதேவரின் குமாரன்; கம்சன் சானூரன் உள்ளிட்டவர்களைக் கொன்றவன்; தேவகியின் பரம ஆனந்த ஸ்வரூபியாக விளங்குபவன்; உலகுக்கு குருவாகத் திகழும் கிருஷ்ணனை வணங்குகிறேன்.

அதஸீ புஷ்ப ஸங்காசம் ஹார நூபுர சோபிதம் ।

ரத்ன கங்கண கேயூரம் க்ருஷ்ணம் வந்தே ஜகத் குரும் ॥ 2 ॥

காயாம்பூ வண்ணத்தைப் போன்றவன் மாலை, தண்டை, சலங்கை இவற்றால் அழகாகத் திகழ்பவன். ரத்தினம் இழைத்த கைவளைகள் தோள் அணிகள் அணிந்தவன்.உலகுக்கு குருவாகத் திகழும் கிருஷ்ணனை வணங்குகிறேன்.

குடிலாலக ஸம்யுக்தம்(தேவம்) பூர்ண சந்த்ர நிபானனம் ।

விலஸத் குண்டல தரம் க்ருஷ்ணம் வந்தே ஜகத் குரும் ॥ 3 ॥

சுருட்டை தலைமுடியுடன் கூடிய அழகு பொருந்தியவன். முழுநிலவு போன்ற அழகு முகம் கொண்டவன். பளீர் என ஒளி விடும் குண்டலங்கள் அணிந்தவன்; உலகுக்கு குருவாகத் திகழும் கிருஷ்ணனை வணங்குகிறேன்.

மந்தார கந்த ஸம்யுக்தம் சாருஹாஸம் சதுர்புஜம் ।

பர்ஹி பிம்சாவ சூடாங்கம் க்ருஷ்ணம் வந்தே ஜகத் குரும் ॥ 4 ॥

மந்தார பூக்களின் நறுமணத்துடன் கூடியவன். அழகான புன்னகை கொண்டவன். நான்கு கைகள் உடையவன். மயில் தோகையை தலையில் அணிகலனாகச் சூடியவன் உலகுக்கு குருவாகத் திகழும் கிருஷ்ணனை வணங்குகிறேன்.

உத்புல்ல பத்ம பத்ராக்ஷம் நீலஜீமூத ஸந்நிபம் ।

யாதவானாம் சி’ரோ ரத்னம் க்ருஷ்ணம் வந்தே ஜகத் குரும் ॥ 5 ॥

மலர்ந்த தாமரை இதழ் போன்ற கண்களை உடையவன். நீருண்ட மேகத்தைப் போன்றவன். யாதவர்களின் ரத்னமாக முடிசூடா மன்னனாகத் திகழ்பவன். உலகுக்கு குருவாகத் திகழும் கிருஷ்ணனை வணங்குகிறேன்.

ருக்மிணீ கேளி ஸம்யுக்தம் பீதாம்பர ஸுசோ’பிதம் ।

அவாப்த துளஸீ கந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத் குரும் ॥ 6 ॥

ருக்மிணி தேவியுடன் கேளிக்கைகளில் கலந்து கொள்பவன். பீதாம்பரத்துடன் ஒளி பொருந்தியவனாகத் திகழ்பவன். துளசியின் பரிமளத்தை உடையவன். உலகுக்கு குருவாகத் திகழும் கிருஷ்ணனை வணங்குகிறேன்.

கோபிகானாம் குசத்வந்த்வ குங்குமாங்கித வக்ஷஸம் ।

ஸ்ரீ’ நிகேதம் மஹேஷ்வாஸம் க்ருஷ்ணம் வந்தே ஜகத் குரும் ॥ 7 ॥

கோபிகை கொங்கைகளின் குங்குமக்குழம்பு அடையாளத்தை மார்பில் கொண்டவன். ஸ்ரீமகாலட்சுமிக்கு இருப்பிடமானவன். மிகப் பெரிய வில்லாளியாக விளங்குபவன். உலகுக்கு குருவாகத் திகழும் கிருஷ்ணனை வணங்குகிறேன்

ஸ்ரீவத்ஸாங்கம் மஹோரஸ்கம் வனமாலா விராஜிதம் ।

ச’ங்க சக்ர தரம் தேவம் க்ருஷ்ணம் வந்தே ஜகத் குரும் ॥ 8 ॥

ஸ்ரீவத்ஸம் எனும் மருவை அடையாளமாகக் கொண்டவன் அகன்ற மார்பை உடையவன் வனமாலை சூடியிருப்பவன் சங்கு சக்கரங்களைத் தரித்திருப்பவன். உலகுக்கு குருவாக திகழும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை வணங்குகிறேன்

க்ருஷ்ணாஷ்டக மிதம் புண்யம் ப்ராத ருத்தாய ய: படேத் ।

கோடிஜன்ம க்ருதம் பாபம் ஸ்மரணாத் தஸ்ய நச்யதி ॥ 9॥

எவன் ஒருவன் புண்ணியம் மிகுந்த இந்த கிருஷ்ணாஷ்டகம் என்னும் இந்த எட்டு சுலோகங்களைப் பற்றி எண்ணுகிறானோ அவன், கோடிப் பிறவிகளில் செய்த பாவம் அடியுடன் நாசமடையும். அப்படியிருக்க இவற்றை காலை நேரத்தில் படித்தானாகில் அவனுக்கு எப்பேர்ப்பட்டவை உண்டாகும் என்பதைக் சொல்லவும் வேண்டுமோ?!

ஆன்மீகம்